தேசிய வடிவமைப்பு நிலையம்- 2021
-----------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்
----------------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
----------------------------------------------------

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
-------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு
------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிலயத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிலையத்தின் கட்டுப்பாட்டு சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் போது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப்பு பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப்பு பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

#### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்பகளுடன் இணக்கமின்மைகள். | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 133,594,058 மொத்தக் கிரயமான கட்டிடங்கள் | கட்டிடங்கள், இயந்திரங்கள், கணனி அலுவலக உபகரணங்கள், தளபாடமும் பொருத்திகளும் கருவிகளும் | அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்புச் செய்து நியாயப் |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் கணனி அலுவலக உபகரணங்கள் தளபாடங்களும் பொருத்திகளும், கருவிகளும் உபகரணங்களும், நூல் நிலையப்புத்தகங்கள் என்பன கணக்கீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியும் அவற்றின் நியாயப் பெறுமதியும் மீளாய்வு செய்யப்பட்டு சொத்துகளை மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்களும், நூல் நிலையப் புத்தகங்கள் முதலிய சொத்துக்களை வகுதி ரீதியாக மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் கீழ் தலைமை அலுவலகத்தின் இயந்திரங்கள், உபகரணங்களும் கருவிகளும் என்பவற்றின் மீள்மதிப்பு நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுமதியில் நிதிகூற்றுகளில் காட்டுதல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதத்துறை கணக்கீட்டு நியமம் 9 இன் பிரகாரம் இருப்புக்கள் சேதமடைந்து இருக்குமாயிருந்தால் அல்லது காலம் கடந்து போயிருக்குமானால் அதற்கான நிதி ஏற்பாட்டினை மேற்கொண்டு இறுதி இருப்பினை கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியின் அடிப்படையில் இரண்டு பெறுமதிகளில் குறைந்த பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுகளில் காட்டப்படவேண்டிய போதிலும் இறுதி இருப்பின் நிகர தேறக்கூடிய பெறுமதியை கணிப்பீடு செய்யாது அதன் கிரயமான ரூபா 5,561,132 பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | தற்பொழுது காணப்படுகின்ற பழைய இருப்புக்களை முடியுமான அளவில் விற்பனை செய்வதற்கும் ஆண்டிற்குள் இருப்புப் பெறுமதியை மீளக்கணிப்பீடு செய்து புதிய பெறுமதிகளை ஏடுகளில் உள்ளடக்குவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 72,409,350 மொத்த பெறுமதியான ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் 05 விடயங்களின் பெறுமதியை சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள அப்பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்த போது | 2022 ஆம் ஆண்டிற்குள் சொத்துக்களை வகுதிகளுக்கு இணங்க மீள்மதிப்புச் செய்தும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை மேலும் நாளது வரையாக்குவதன் மூலமும் இந்த வித்தியாசத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் துணைப் பதிவேடுகளுக்குமிடையிலான வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரூபா 16,250,380 தொகையான வித்தியாசமும் சொத்துக்களின் மீளாய்வு அறிக்கையுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 19,388,241 தொகையான வித்தியாசமும் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வித்தியாசங்கள் தொடர்பாக கணக்கிணக்கம் செய்து சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு 12 மாத கால எல்லைக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் நிலையத்தின் வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து குழாம் வாகனங்களுக்கும் மிகவும் விரைவாக எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(5) | உபகட்டு நிதி வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாடு முடிவுறுத்தப்பட்டு 10 நாட்களுக்குள் அதனை மீண்டும் தீர்த்து வைக்கப்படவேண்டிய போதிலும் | முற்பணங்களைத் துரிதமாக தீர்த்துவைக்கும் தேவைப்பாடு தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தி தாமதங்களைக் குறைப்பதற்கு நடடிக்கை | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டில் 33 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,160,710 பெறுமதியான முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு 12 நாட்களிலிருந்து 71 நாட்கள் வரையான தாமதம் இடம்பெற்றிருந்தது. | எடுக்கப்படுகின்றது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,738,976 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,045,574 ஆகும் அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 3,306,598முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு திறைசேரி மானியம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வடிவமைப்பினைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்தல், பொறுப்பேற்றல், இறக்குமதி செய்யப்படுகின்ற மூலப்பொருட்களுக்காக உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்துதல், முதலீடுகள் பற்றி கவனத்தில் கொள்ளுதல் அப்பொருட்களின் தரங்களும் நியமங்களும் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல், ஆய்வு கூட வேலைத்தளங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைப் பேணுதல் என்பன நிலையத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் செய்ற்பாடுகளாக இருந்த போதிலும் இப்பிரிவிற்காக ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். நிலையத்தில் இன்றுவரை ஒரு ஆய்வு கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் | ஆராய்ச்சிப் பிரிவினை அபிவிருத்தி செய்து நிறுவனத்தின் அதிகாரச் சட்டத்திற்குரிய செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான திட்டங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது. | சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் ஆராய்ச்சிப் பிரிவினை ஸ்தாபித்தல் வேண்டும். |

வருடாந்தம் மிகவும் குறைந்த ஆராய்ச்சிகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த ஆராய்ச்சிகள் சம்பந்தமாக அவை கைப்பணியாளர்களால் எவ்வளவுக்கு ஈடுபடுத்தப்படுகின்றது என்ற ஆராய்ச்சிகளின் வெற்றித் தன்மை தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக ஆராய்ச்சியினை மேற்கொண்டு அப்பொருட்களின் தரம் மற்றும் நியமங்கள் தொடர்பாக சான்றிதழ் வழங்குதல் நிலையத்தால் இன்று வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| தேசிய வடிவமைப்பு நிலமையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், மொனராகலை , புத்தளம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கைத்தொழில் வல்லுரைகள் தொழில் நுட்ப குழுக்கள் ஆகியோருக்கான தொழில் நுட்பங்கள், இயலுமை அபிவிருத்தி, ஆலோசனை சேவைகள் என்பவற்றை வழங்குவதற்காக 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதி ரூபா 46,715,763 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 51,313,305 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் உடன்படிக்கை காலத்தை நீடித்தல் அல்லது புதிய உடன்படிக்கையினை மேற்கொள்ளுதல் இடம்பெற்றிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து ரூபா 14,806,278 | தற்பொழுது ருனேீ இன் மூலம் எங்கள் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அச்செயற்திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் மிகுதிப் பணமாகிய ரூபா 2,312,228 தொகையை செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் விளைதிறனான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் கடந்த ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் மற்றும் ஏனைய சிக்கல்களின் காரணமாக அவற்றினை நிறைவேற்ற முடியாதிருந்தன. எனினும் நிலைமை சுமூகமடைந்த உடன் எதிர்காலத்தில் இந்நிதியத்தை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு | பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்று செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இப்பணத்திலிருந்து செயற்திட்டத்தை தொடர்ந்தும் அமுல்ப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,312,228 தொகை கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தும் அதிலிருந்து எதுவித செயற்திட்ட செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் நிலையத்தினால் பத்து நாட்களில் பத்து பெற்றிக் பயிற்சி கறகை நெறி செயற்திட்டங்கள் ஒரு தனியார் நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ரூபா 6,850,000 விலைக்கு அந்த சேவையை பெற்றுக்கொள்ளுதலானது சேவை வழங்கும் நிறுவனத்தின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் கேள்விகள் கோராது பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆகக் குறைந்த விலையுடனான கேள்வி மனுவைத் தெரிவு செய்யும் நடைமுறையைப் பின்பற்றுவதற்கான காலப்பகுதி, நாட்டின் நிலைமை, மூலப்பொருட்கள், நிபுணத்துவ வளவாளர்களை தெரிவு செய்யும் நடைமுறை என்பவற்றிற்காக காலத்தை செலவு செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. | பெறுகை நடைமுறையை பின்பற்றி ஆகக் குறைந்த விலையுடனான கேள்வி மனுவை தெரிவு செய்வதனூடாக நிறுவனத்திற்கு உச்ச அளவு நலன்களை வழங்கவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தில் கேட்போர் கூடத்தின் மறுசீரமைப்பினை உருவாக்கி தயாரிப்பதற்காக ரூபா 4,999,001 தொகைக்கும் பணிப்பாளர் சபை கூட்ட மண்டபத்தை உருவாக்கி தயாரிப்பதற்காக ரூபா 2,498,569 தொகைக்கும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு ஒப்பந்தங்களின் "உருவாக்கி தயாரித்தல்" என்பதற்காக வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் இரண்டு ஒப்பந்தங்களின் மதிப்பீட்டு பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (அ)பந்தியின் பிரகாரம் | உருவாக்கி தயாரிப்பதற்காக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்காக எடுக்கப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் பெறுகை குழுக்களின் எழுத்துமூல சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளாததினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நடவடிக்கைகளின் போது உரிய அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இப்பெறுகையினூடாக பொருளாதார நலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே ‘‘உருவாக்கி தயாரித்தல்’’ பெறுகை நடைமுறையைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பதவியணியில் 114 அங்கீகரித்த பதவிகள் காணப்பட்டதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 36 ஆகும். அந்த வெற்றிடமான பதவிகளில் சில பதவிகள் 2018 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டன. இதன் காரணமாக நிலையத்தின் பிரதான பதவியாகிய பணிப்பாளர் பதவி 2021 மே மாதத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. ஒரு ஆண்டு கடந்திருந்தும் இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு நிலையத்திற்கு முடியாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய அங்கீகாரத்தினைப் பெற்று ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிலையத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்ட செயற்பாடுகளானது பின்னிணைப்பு 22 இன் கீழ் திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் போதியளவில் அந்த அனைத்து துறைகளும் உள்ளடக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | திட்டமிட்டவாறு உள்ளகக் கணக்காய்வினை அமுல்ப்படுத்த வேண்டியதுடன் உள்ளகக் கணக்காய்வின் காண்புகளை நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கும் |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 29 செலவு விடயங்களுக்கான ரூபா 30,162,000 மொத்த தொகையான நிதி ஏற்பாட்டுப் பணத்தில் ரூபா 12,449,815 தொகை பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 17,712,185 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பானது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 34 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் பரவிக் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீட்டு எல்லைக்குள் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 540,000 நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 03 செலவு விடயங்களுக்கான செலவுகள் ரூபா 2,167,611 ஆக இருந்ததுடன் நிதி ஏற்பாடு ரூபா 1,450,000 ஆக இருந்ததனால் ரூபா 717,611 ஆல் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை மிகைத்திருந்தது. 04 செலவு விடயங்களுக்காக ரூபா 659,191 தொகை மதிப்பீடு செய்யப்படாது செலவு செய்யப்பட்டிருந்தது. | | |